டிரஸ்ட் ஆரம்பித்திட...

புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.

பகவான் பவுண்டேஷன்
96004 02096



நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 136 | 10.11.2025 | MONDAY | IPPASI : 23 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 136 | 10.11.2025 | திங்கள்கிழமை | ஐப்பசி : 23 | விலை : ரூ.5/–



விஜய், அதிமுக, பாஜக கூட்டணி.. எடப்பாடி பழனிசாமியின் எண்ணம் அதுதான்.. ஜிகே வாசன் பேட்டி 3

4 துரோகங்களால் அதிமுகவை வீழ்த்த முடியாது: பழனிசாமி திட்டவட்டம்

2 "இதுல தான் ஸ்பெஷலிஸ்ட்டே".. தொலைந்த செல்போன்களை மீட்பதில் மாஸ் காட்டும் மதுரை காவல்துறை


# மூத்த குடிமக்களின் நல்வாழ்வுக்கான 'அன்புச்சோலை' திட்டம் முதல்வர் திருச்சியில் இன்று தொடங்கிவைக்கிறார்



சென்னை: நவ.10-

புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களில் முதல்வர் ஸ்டாலின் இரண்டு நாள் கள ஆய்வுப் பயணம் மேற்கொள்கிறார். புதுக்கோட்டை மாவட்டத்தில் இன்று ரூ.767 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார். திருச்சியில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்திட முதியோர் மனமகிழ் வளமையம் அன்புச்சோலை திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'தமிழக முதல்வர் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கள ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில், இரண்டு நாள் பயணமாக புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களில் கள ஆய்வு மேற்கொள்ள இருக்கிறார்.

பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்தி நாளொரு திட்டம், பொழுதொரு சாதனை என வளர்த்துவரும் முதல்வர் ஸ்டாலின், மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவற்காக, வீடுகளில் உள்ள முதியவர்கள் மனம் சோர்வடையாமல் ஊக்கம் பெற உதவும் வகையில் தற்போது உருவாக்கியுள்ள புதிய திட்டம் "அன்புச்சோலை திட்டம்".

முதல்வர் ஸ்டாலின் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, "அன்புச்சோலை முதியோர் மனமகிழ் வள மையம்" என்ற திட்டத்தை திருச்சி மாநகரில் இன்று பகல் 12.30 மணியளவில் தொடங்கி வைக்கிறார்.

ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட முதியோர்களுக்காக முதியோர் இல்லங்கள், ஒருங்கிணைந்த வளாக இல்லங்கள், நடமாடும் மருத்துவ அலகுகள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் உள்ளிட்ட மூத்த குடிமக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களைத் திராவிட மாடல் அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. தற்போது தொடங்கப்படும் "அன்புச்சோலை முதியோர் மனமகிழ் வள மையங்கள்" திட்டம் மூத்த குடிமக்களின் ஆரோக்கியமான வளர்ச்சியில் கவனம் செலுத்தும் வகையில் சமூக மையங்களாகச் செயல்படும்.

மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர், திண்டுக்கல் ஆகிய 10 மாநகராட்சிகளில் தலா இரண்டு வீதம் 20 அன்புச்சோலைகள், தொழில்துறை மாவட்டங்களான ராணிப்பேட்டையிலும் கிருஷ்ணகிரியிலும் 2 அன்புச்சோலைகள், பெருநகர சென்னை மாநகராட்சியில் தண்டையார்பேட்டை, சோழிங்கநல்லூர், விருகம்பாக்கம் ஆகிய இடங்களில் 3 அன்புச்சோலைகள் என மொத்தம் 25 "அன்புச்சோலை" மையங்கள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு பொழுதுபோக்கு அம்சங்கள், யோகா, நூலகம் மற்றும் தேவையான திறன் மேம்பாடு சேவைகள் வழங்கப்படுகின்றன.

அன்புச்சோலை திட்டம், முதியோர்கள் மதிக்கும் தமிழ்ப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கிறது. குடும்பங்கள் முதன்மைப் பராமரிப்பாளர்களாகத் தொடர்வதற்கு அரசாங்கம் இத்திட்டத்தின் மூலம் துணைபுரிகிறது.

முதல்வர் ஸ்டாலின், "முதியோர்கள்தான் சமுதாயத்தின் வழிகாட்டும் சக்தி. இன்றைய தமிழ்நாட்டை உருவாக்க தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்தவர்கள். அவர்கள் கண்ணியத்துடனும், பராமரிப்புடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்வதை உறுதி செய்வது எமது கடமை.

அன்புச்சோலை மையம் மூத்த குடிமக்கள் நலன் கருதி பல்வேறு அம்சங்கள் கொண்டு, தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் பகலில் மட்டும் இயங்கும் மையமாகச் செயல்படும். ஒவ்வொரு மையமும் குறைந்தபட்சம் 50 மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் போதிய இடவசதி, போதுமான உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டிருக்கும். இந்தப் பகல்நேரப் பராமரிப்பு மையங்களில், முதியவர்கள் தோழமை மற்றும் அர்த்தமுள்ள செயல்பாடுகளில் ஈடுபடலாம். அன்புச்சோலை மையங்களுக்கு முதியோர்கள் சென்றுவர போக்குவரத்து வசதியுள்ள இடங்களில்தான் இம்மையங்கள் அமைக்கப்படுகின்றன.

அன்புச்சோலை மையங்களுக்கு வருகை தரும் முதியவர்களுக்குத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஆதரவுடன் மதிய உணவு மற்றும் சிற்றுண்டி வழங்கப்படும். தகுதி வாய்ந்த பராமரிப்பாளர்கள் மற்றும் இயன்முறை சிகிச்சையாளர்கள் பணியமர்த்தப்பட்டு முதியோரின் விரிவான பராமரிப்பு உறுதி செய்யப்படும்.

அன்புச்சோலை மூலமாக, முதியோர் குடும்பப் பிணைப்பைத் தொடர்ந்தே, பாதுகாப்பான சூழலில், அர்த்தமுள்ளதாக பகல் நேரங்களைக் கழிக்க முடியும். இது, கருணைமிக்க மற்றும் சமூக நீதியினை உள்ளடக்கிய தமிழ்நாட்டிற்கான எமது அரசின் பார்வையைப் பிரதிபலிக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா:

முதல்வர் ஸ்டாலின் இரண்டு நாள் பயணமாக புதுக்கோட்டை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் கள ஆய்வு மேற்கொள்கிறார்கள். முதல்வர் ஸ்டாலின் புதுக்கோட்டை மாவட்டத்தில் 10.11.2025 திங்கள் கிழமை காலை 11 மணியளவில் கீரனூர் மூகாம்பிகை பொறியியல் கல்லூரித் திடலில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்கிறார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் திராவிட மாடல் அரசின் சார்பில் இதுவரை ரூ.11,481 கோடி மதிப்பீட்டில் 38,35,669 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளார். ரூ.2,800 கோடியில் 62,088 வளர்ச்சித் திட்டப் பணிகளை நிறைவேற்றியுள்ளார்.

முதல்வர் ஸ்டாலின் 10.11.2025 திங்கள் கிழமை காலை 11 மணியளவில் நடைபெறும் விழாவில் 767 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்தல் ஆகியவற்றுடன் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்குகிறார்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5000 லிட்டர் கலப்பட டீசல் பறிமுதல் சேலம் குடிமைப் பொருள் குற்ற புலனாய்வு துறை போலீசார் அதிரடி




சேலம், நவ.10-

சேலம் மாவட்டம் குடியுரிமை பொருள் குற்றப் புலனாய்வுத்துறை காவல் துறை தலைவர் ருபேஷ் குமார், மீனா ஐ.பி.எஸ் மற்றும் கோவை மண்டல காவல் காண்காணிபாளர் ரமேஷ் குமார் அவர்களின் உத்தரவின் பேரில், சேலம் மாவட்டம் குற்ற புலனாய்வு துறை புகாரின் பேரில், கடந்த வியாழன் அன்று சேலம் மாநகரம் இராமகிருஷ்ணா சாலை எல்.ஆர்.ஏன் பஸ் டிப்போவில் உள்ளே டேங்கரில் இருந்து, முறைகேடாக, தனியார் பேருந்துகளுக்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 5000 லிட்டர் கலப்பட டீசலை கைப்பற்றியது. விற்பனைக்கு வைத்திருந்த நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த மோகன், சேலம் மாவட்டம் ஓமலூர் சேர்ந்த ராமசாமி ஆகியோர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு உள்ளனர். மேலும் வாகனம் மற்றும் டீசலின் உரிமையாளரை கைது செய்ய வேண்டி தனிபடை அமைத்து தேடி வருகின்றனர்.


விளம்பரம் மற்றும் செய்திகள் தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!

தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)

88705 00000
sakkraviyugam2025@gmail.com







## திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் ஆய்வின் முடிவை எதிர்நோக்கி நல்லாறு பாதுகாப்பு இயக்கம் ஆலோசனைக் கூட்டம்

திருப்பூர், நவ.10-

நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தின் ஆலோசனைக் கூட்டமானது, 09.11.2025 அன்று காலை 8.00 மணி அளவில், திருமுருகன் பூண்டியில் உள்ள வேலன் மஹாலில் Rtn. கோவிந்தராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாநிலச் செயலாளர் ராமமூர்த்தி அவர்கள் நல்லாற்றின் வரலாறு மற்றும் சிறப்பினை பற்றி சிறப்புரை ஆற்றினார். இந்த ஆலோசனை கூட்டத்தில், திருப்பூர் மாவட்ட ஆட்சியர் கடந்த 05.11.2025 புதன் கிழமை அன்று, நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் அளித்த மனுவின் அடிப்படையில் ஆய்வு செய்தார். அந்த ஆய்வின் முடிவை உடனடியாக வெளியிட வேண்டும் என கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. மேலும் தமிழக முதல்வரின் தனி பிரிவிற்கும், மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அரசு பொதுப்பணித்துறைக்கும், நீர்வளத் துறைக்கும் கடிதம் அனுப்புவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

## திருப்பூர் மாவட்டத்தில் சிறப்பு தீவிர திருத்தப் பணி வாக்காளர்களின் இல்லத்திற்கு சென்று கணக்கெடுப்பு படிவம் வழங்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு




திருப்பூர், நவ.10-

மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் (09.11.2025) திருப்பூர் மாநகராட்சி, பூத்தார் தியேட்டர், காமாட்சிபுரம் மற்றும் திருப்பூர் வடக்கு வட்டம், ராமையா காலணி ஆகிய பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளான வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் இல்லத்திற்கு சென்று கணக்கெடுப்பு படிவம் வழங்கும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணையம், 01.01.2026 ஆம் நாளினை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 பணிகள் மேற்கொள்ள கால அட்டவணை வெளியிட்டுள்ளது. அதன்படி, திருப்பூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் 28.10.2025 முதல் 07.02.2026 வரை நடைபெறுகிறது. வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் இப்பணிக்கான கணக்கீட்டு படிவம் (Enumeration Form) இரட்டை பிரதிகளில் 04.11.2025 முதல் வீடு வீடாக வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு, 04.12.2025 க்குள் மீள பெறப்படும். அந்தந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வழங்கப்படும் கணக்கீட்டு படிவங்களை, பொது மக்கள் முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பத்துடன், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மீள வரும் போது சமர்ப்பித்திட வேண்டும். அவ்வாறு பெறப்படும் படிவங்களில் உள்ள வாக்காளர்களின் பெயர்கள் மட்டுமே வரைவு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும்.

மேற்படி வாக்காளர் உதவி மையங்களில் அலுவலக பணி நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை வாக்காளர்கள்,

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 பணிகள் தொடர்பாக தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு நேரில் அணுகியும், மேற்குறிப்பிட்டுள்ள தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும் விளக்கம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இன்றைய தினம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் திருப்பூர் மாநகராட்சி, பூத்தார் தியேட்டர், காமாட்சிபுரம் மற்றும் திருப்பூர் வடக்கு வட்டம், ராமையா காலணி ஆகிய பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளான வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் இல்லத்திற்கு சென்று கணக்கெடுப்பு படிவம் வழங்கும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில், வட்டாட்சியர் (திருப்பூர் வடக்கு) வே.கண்ணாமாணி அவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

# சென்னை வீடுகளில் தொங்கும்.. நீல நிற பாட்டில்கள்! தெரு நாய்களை தடுக்க புது யோசனை!



சென்னை, நவ.10-

சென்னையில் நாய்கள் மற்றும் பூனைகளை கட்டுப் படுத்த வீட்டின் வாசல்களில் நீல நிற தண்ணீர் கொண்ட பாட்டில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் வீடுகளுக்குள் தெரு நாய்கள் வருவது தடுக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


சென்னை, சாலி கிராமத்தில் உள்ள வீடுகளுக்கு வெளியே, நீல நிற நீர் நிரப்பப்பட்ட பாட்டில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. எம்.ஜி.ஆர் தெரு, காவேரி ரங்கன் நகரில் வரிசையாக அமைந்துள்ள மூன்று அடுக்குமாடி குடியிருப்புகளின் குடியிருப்பாளர்கள் இந்த வித்தியாசமான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இப்படி பாட்டில்கள் கட்டப்பட் டிருப்பதால் தெரு நாய்கள் தொல்லை கட்டுப்படுத்தப்ப ட்டிருக்கிறதா? என்கிற கேள்விக்கு வேறுபட்ட பதில்கள் கிடைத்திருக்கின்றன. ஒவ்வொரு அப்பார்ட் மெண்டுக்கும் ஒரு செக்யூரிட்டி இருக்கிறார். அவர்கள், தெரு நாய்களின் தொல்லை கட்டுப்படுத்தப்பட் டிருப்பதாகவும், நாய்கள், பூனைகள் உள்ளே வந்து அசுத்தம் செய்வது குறைந்திருக்கிறது என்று கூறுகின்றனர். ஆனால், நாய்களின் தொல்லை கட்டுக்குள் வரவில்லை என்று வீட்டின் உரிமையாளர்கள் கூறுகின்றனர். "அதெல்லாம் இல்லை. பூனைகளும், நாய்களும் உள்ளே வந்து அசுத்தம்தான் செய்கின்றன. நீல நிற பாட்டில்களில் உள்ள திரவம் நாய்களை பயமுறுத்தவில்லை" என்று கூறுகின்றனர். இப்படி நீல நிற பாட்டில்கள் வீட்டு வாசல்களில் கட்டி வைப்பது பல்வேறு நகரங்களில் பின்பற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பல்வேறு நகரங்களில் இந்த முறை பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனாலும், தெரு நாய்களின் தொல்லை குறைந்தபாடில்லை. அந்த பாட்டில்கள் கட்டப்ப ட்டிருக்கும் வீடுகளின் வாசல்களிலேயே தெருநாய்கள் படுத்துக் கிடக்கின்றன.

இது குறித்து விலங்குநல ஆய்வாளர்கள் கூறுகையில், "நாய்களுக்கு மனிதர்களை போல பல வண்ணங்களை பிரித்து பார்க்க முடியாது. நீலம், மஞ்சள் மற்றும் பழுப்பு நிறங்கள் மட்டும்தான் நாய்களின் கண்களுக்கு தெரியும். எனவே தனியாக நீல நிறத்தை பார்த்து நாய்கள் பயப்படாது. அந்த நிறம், நாய்களுக்கு ஏற்கெனவே பழக்கப்பட்ட நிறம்தான். இப்படி பாட்டில்களை கட்டுவது நாய்களை விரட்டாது. அதற்கு பதிலாக, வாசல் கேட்களில் வலையை பொருத்தலாம்" என்று கூறுகின்றனர்.

சென்னையை பொறுத்தவரை தெரு நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணி மற்றும் சிப் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது தவிர வீட்டில் வளர்க்கும் நாய்களுக்கு உரிமம் கொடுக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. சென்னையில் இதற்காக இன்று திரு.வி.க.நகர், புளியந்தோப்பு, லாயிட்ஸ் காலனி, நுங்கம்பாக்கம், கண்ணம்மாபேட்டை, மீனம்பாக்கத்தில் முகாம்கள் இன்று அமைக்கப்பட் டிருக்கின்றன. இந்த முகாம்களில் நாய்களுக்கு உரிமம் வழங்குவதுடன் மைக்ரோசிப் பொருத்தி தடுப்பூசி போடப்படும். காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை முகாம் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆர்எஸ்எஸ் ஏன் பதிவு செய்யப்படவில்லை? மோகன் பகவத் விளக்கம்



மும்பை, நவ.10-

பதிவு இல்லாமல் செயல்படுவதற்காக ஆர் எஸ்எஸ் அமைப்பை காங்கிரஸ் தலைவர்கள் விமர்சித்த நிலையில், ஆர்எஸ்எஸ் தனிநபர்களின் அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் மோகன் பகவத் கூறினார். மேலும், அவர் இந்து தர்மம் கூட பதிவு செய்யப்படவில்லை என்றும் கூறினார்.

கர்நாடக அமைச்சரும், காங்கிரஸ் தலைவருமான பிரியங்க் கார்கே, தேசத்திற்கு சேவை செய்வதாகக் கூறிக்கொள்ளும் ஆர்எஸ்எஸ் ஏன் பதிவு செய்யப்படாத அமைப்பாக உள்ளது என்று கேள்வி எழுப்பினார். பிரியங்க் கார்கேவின் கருத்துகளுக்கு பதிலளித்த ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத், "ஆர்எஸ் எஸ் 1925 இல் தொடங்கியது. நாங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பதிவு செய்திருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா?. சுதந்திரத்திற்குப் பிறகு, இந்திய அரசு பதிவை கட்டாயமாக்கவில்லை.

சட்டம் பதிவு செய்யப்படாத தனிநபர்களின் அமைப்புகளைக் கூட அங்கீகரிக்கிறது. நாங்கள் தனிநபர்களின் அமைப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ளோம், நாங்கள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு. நாங்கள் வருமான வரி செலுத்துகிறோம். மூன்று முறை தடை செய்யப்பட்டோம், ஒவ்வொரு முறையும் நீதிமன்றங்கள் எங்கள் அமைப்பின் தடையை நீக்கின.

அரசாங்கங்களும், நீதிமன்றங்களும் எங்களை ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக அங்கீகரித்துள்ளன. எனவே, நாங்கள் பதிவு செய்ய வேண்டியதில்லை. பல விஷயங்கள் பதிவு செய்யப்படவில்லை, இந்து தர்மம் கூட பதிவு செய்யப்படவில்லை. ஆர்எஸ்எஸ் காவி கொடிகளை மதிக்கிறது. அதே வேளையில், இந்திய மூவர்ணக் கொடிக்கு மிகுந்த மரியாதை அளிக்கிறோம்." என்று மோகன் பகவத் கூறினார்.

இந்த மாத தொடக்கத்தில், காங்கிரஸ் தலைவர் பிரியங்க் கார்கே தனது எக்ஸ் பதிவில், "ஆர்எஸ்எஸ் உண்மையிலேயே தன்னலமின்றி தேசத்திற்கு சேவை செய்தால், வெளிப்படைத் தன்மையுடனும் சட்டப்பூர்வமாகவும் செயல்படும் லட்சக்கணக்கான அரசு சாரா நிறுவனங்களைப் போல ஏன் பதிவு செய்யக்கூடாது?. பதிவு செய்யப்படாத ஒரு அமைப்பின் தலைவர் ஏன் மேம்பட்ட பாதுகாப்பினை பெறுகிறார். அவரை பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சருக்கு இணையாக வைப்பது ஏன்?. ஆர்எஸ்எஸ்க்கு யார் நிதியளிக்கிறார்கள்?" என்று கேள்வி எழுப்பியிருந்தார். சமீபத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ஆர்எஸ்எஸ்ஸை தடை செய்ய வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

# எனது உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது: தேஜ் பிரதாப் யாதவ்

பாட்னா, நவ.10-

தனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாக தேஜ் பிரதாப் யாதவ் தெரிவித்துள்ளார். அவருக்கு 'ஒய் பிளஸ்' பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் அவர் இதனை கூறியுள்ளார்.

பொறுப்பற்ற நடத்தை காரணமாக தேஜ் பிரதாப் யாதவை ஆறு ஆண்டுகளுக்கு ராஷ்ட்ரீய ஜனதாதளம் கட்சியில் இருந்து நீக்குவதாக அவரது தந்தையும், கட்சியின் நிறுவனருமான லாலு பிரசாத் யாதவ் அறிவித்தார். மேலும் பிரதாப்புடனான அனைத்து குடும்ப உறவுகளையும் துண்டித்து கொள்வதாக அப்போது தெரிவித்தார்.

இதன் பின்னர் ஜன் சக்தி ஜனதா தளம் என்ற தனி கட்சியை தேஜ் பிரதாப் யாதவ் தொடங்கினார். தற்போது நடைபெற்று வரும் பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் அவரது கட்சி 22 இடங்களில் போட்டியிடுகிறது. இதில் வைஷாலி மாவட்டத்தில் உள்ள மஹுவா தொகுதியில் அவர் போட்டியிட்டுள்ளார்.

இந்நிலையில், பாட்னாவில் செய்தியாளர்களை தேஜ் பிரதாப் யாதவ் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: "எனக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. எனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது. நான் எனது எதிரிகளால் கொல்லப்படலாம். எனது இளைய சகோதரர் தேஜஸ்வி யாதவுக்கு எனது ஆசிகள் என்றும் இருக்கும். அவர் மென்மேலும் வளர்ந்து பல உயரத்தை எட்ட வேண்டுமென விரும்புகிறேன்" என்றார்.

பிஹார் மாநிலத்தில் இரண்டாம் கட்டமாக 122 தொகுதிகளுக்கு நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறுகிறது. அதனால் இன்று மாலை உடன் அங்கு தேர்தல் பிரச்சாரம் நிறைவடைகிறது.

# "இதுல தான் ஸ்பெஷலிட்ஸ்ட்டே".. தொலைந்த செல்போன்களை மீட்பதில் மாஸ் காட்டும் மதுரை காவல்துறை



மதுரை, நவ.10-

தொலைந்து போன செல்போன்களை கண்டுபிடித்து தருவதில் மதுரை மாவட்ட காவல்துறை முதலிடம் பெற்றுள்ளது. தமிழகத்தில் சிணிமிஸி தளத்தின் மூலம் பொதுமக்களின் புகார்களை விரைவாக பதிவு செய்து, தொலைந்த மொபைல் சாதனங்களை மீட்டுத் தருவதில் மாநில அளவில் மதுரை மாவட்டம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

இதுகுறித்து மதுரை மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "மதுரை மாவட்ட காவல்துறை மக்களின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளில் மாநிலத்திலேயே முன்னிலையில் இருந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மக்களிடம் ஏற்பட்ட நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையில் தொலைந்து போன மொபைல் சாதனங்களை துரிதமாக மீட்கும் நடவடிக்கைகளில் மதுரை மாவட்ட காவல்துறை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பெற்றுள்ளது.

இந்த சிறப்பிற்கு காரணம் CEIR - Central Equipment Identity Register (மத்திய சாதன அடையாளப் பதிவேடு). சிணிமிஸி என்பது தொலைபேசி திருட்டு அல்லது தொலைந்துபோன மொபைல் சாதனங்களை அடையாளம் காணவும், அவற்றின் சேவைகளை முடக்கவும் பயன்படும் மத்திய தரவுத்தள அமைப்பு ஆகும். இது இந்திய அரசின் தொலைதொடர்பு துறையால் தொடங்கப்பட்ட ஒரு தேசிய முயற்சி ஆகும். இந்த CEIR தளம் IMEI (International Mobile Equipment Identity) எண்ணை அடிப்படையாக கொண்டு செயல்படுகிறது. இதன் மூலம் தொலைந்த அல்லது திருடப்பட்ட மொபைல் சாதனங்களை உடனடியாக முடக்கலாம். சாதனம் மீண்டும் கிடைத்தால் சேவையை மீண்டும் செயல்படுத்தலாம். போலியான IMEI எண்களை கொண்ட சாதனங்களை அடையாளம் காணலாம். தமிழகத்தில் இந்த CEIR தளத்தின் மூலம் பொதுமக்களின் புகார்களை விரைவாக பதிவு செய்து, தொலைந்த மொபைல் சாதனங்களை மீட்டுத் தருவதில் மாநில அளவில் மதுரை மாவட்டம் முதல் இடத்தையும், காவல் நிலையம் வாரியாக உசிலம்பட்டி காவல் நிலையம் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.

இதற்காக இந்திய அரசின் தொலைதொடர்பு துறை சார்பில் வழங்கப்படும் DOT-CEIR சிறந்த செயல்பாட்டுக்கான இந்த விருதை தமிழக அரசின் காவல்துறை கூடுதல் இயக்குநர் (ADGP Cyber Crime) சந்தீப் மிட்டல் வழங்கி பாராட்டினார். இந்த அங்கீகாரம், மதுரை மாவட்ட காவல்துறை தமது தொழில்நுட்ப நுண்ணறிவு, மக்களுடன் கொண்டுள்ள நெருக்கம் மற்றும் துரிதமான காவல் நடவடிக்கைகளுக்கான சிறந்த எடுத்துக் காட்டாகும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் கூறுகையில், "இதுபோன்ற தொழில்நுட்ப அடிப்படையிலான சேவைகளை மேலும் வலுப்படுத்தி மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான சேவைகள் தொடர்ந்து வழங்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.





# யார் மைக்செட்டு பெருசுன்னு மைக் செட் போட்டி

தேனி, நவ.10-

தேனி மாவட்டம் கோட்டூர் அருகில் உள்ள தர்மாபுரி மலையடிவார பகுதியில் கூம்பு வடிவ ஒலிபெருக்கி உரிமையாளர்களுக்கான இசை போட்டி திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்று .கம்பம், மஞ்சிநகர், போடி,அம்மாசமுத்திரம்,தர்மாபுரி, ஏரசை,பாலர்பட்டி, உசிலம்பட்டி, தீண்டுக்கல், திருவள்ளூர்,மாவட்டங்களில் இருந்து 250 க்கும் மேற்பட்ட கூம்பு வடிவ ஒலிபெருக்கி உரிமையாளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கூம்பு வடிவ இசை போட்டி திருவிழா வெகு விமர்சையாக தர்மாபுரி மலையடிவார பகுதியில் கூம்பு வடிவ ஒலிபெருக்கி உரிமையாளர்களுக்கான இசை போட்டி திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்று வருகிறது.

இந்தப் போட்டியில் பழமை வாய்ந்த இசை கருவிகளை பயன்படுத்தி இசைப்போட்டி திருவிழா நடைபெற்றது. இந்த இசைப்போட்டி திருவிழாவின் நோக்கமானது பழமை மாறாமல் கூம்பு வடிவ ஒலி பெருக்கியை திருமண நிகழ்ச்சிகள் காதணி விழா வசந்த விழா பூ புனித நீராட்டு விழா அரசியல் நிகழ்ச்சிகளில் பயன்படுத்த வேண்டும் என்று ஒலிபெருக்கி உரிமையாளர் கோரிக்கை விடுத்தனர்

பழமையான ஒலிபெருக்கி இசைக்கருவியை கொண்டு வெற்றியை தீர்மானிக்கும் இசை பொட்டி நடுவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மணிகண்டன் சுருதி பாய்ஸ் இயக்குனர்,ரமேஷ் குமார்,அருண் மலை,பொன்னப்பன் சுப்பிரமணி மற்றும் பொதுமக்கள் மலை அடிவாரப் பகுதியில் நின்று இசை போட்டியை கண்டு களித்தனர்.

# ட்ரம்ப் கருத்து மீதான பிரதமரின் மவுனம், சீன விவகாரம் உள்ளிட்டவை நாடாளுமன்றத்தில் எழுப்பப்படும்: ஜெயராம் ரமேஷ்



புதுடெல்லி, நவ.10-

ஆபரேஷன் சிந்தூர் பற்றிய அமெரிக்க அதிபர் ட்ரம்பின் கருத்து குறித்து பிரதமர் நரேந்திர மோடி மவுனம் காப்பதும், சீனாவுடனான பிரச்சினைகளைத் தீர்க்க மத்திய அரசு தவறியதும், எஸ்ஐஆர் உள்ளிட்டவை வரவிருக்கும் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடருக்கு முன்னதாக முக்கிய கவலைகளாக உள்ளன என்று காங்கிரஸ் தலைவர் ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடர் டிசம்பர் 1 முதல் டிசம்பர் 19 வரை நடைபெறும் என்று மத்திய அரசு அறிவித்தது குறித்து செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த ஜெய்ராம் ரமேஷ், "எஸ்ஐஆர் ஒரு முக்கிய பிரச்சினையாக இருக்கும். ஆபரேஷன் சிந்தூர் போது இந்தியா பாகிஸ்தான் மோதலை நிறுத்தியதாக தொடர்ந்து கூறிவரும் ட்ரம்பின் கருத்து குறித்து பிரதமர் மவுனம் காப்பது ஒரு முக்கிய பிரச்சினை. சீனாவுடனான தற்போதைய உறவு குறித்து ஒரு தெளிவில்லை. சீனாவுடன் எல்லை ஒப்பந்தம் எதுவும் இல்லை, நாம் முந்தைய நிலைக்குத் திரும்பவில்லை. சீனா நிறுவியுள்ள புதிய இயல்புநிலையின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன, இதுவும் முக்கிய பிரச்சினையாக இருக்கும்.

பொருளாதாரம், பொருளாதார வளர்ச்சி விகிதம், மொத்த உள்நாட்டு உற்பத்தி, வேலையின்மை போன்ற பல பிரச்சினைகள் உள்ளன. நாங்கள் மீண்டும் மீண்டும் கோரிக்கைகளை வைத்து வருகிறோம், ஆனால் அவற்றின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

இந்த குளிர்கால கூட்டத்தொடர் இவ்வளவு தாமதமாக கூட்டப்பட்டது எனக்கு மிகவும் ஆச்சரியமாக உள்ளது. குளிர்கால கூட்டத்தொடர் வழக்கமாக நவம்பர் 20 முதல் கூட்டப்பட்டு டிசம்பர் 24 வரை மூன்று அல்லது நான்கு வாரங்கள் வரை நீடிக்கும். இந்த முறை கூட்டத்தொடர் டிசம்பர் 1 ஆம் தேதி தொடங்கி 15 நாட்கள் மட்டுமே நீடிக்கும் என்பது எனக்கு ஆச்சரியமாக உள்ளது. அரசாங்கம் எதற்காக இவ்வளவு வேகமாக ஓடுகிறது என்று எனக்குப் புரியவில்லை. அவர்கள் இந்த கூட்டத்தொடரை ஒரு சம்பிரதாயமாக விரைவில் முடிக்க விரும்புகிறார்கள். தேர்தலுக்கு முன்பு கூட்டத்தொடர்கள் குறைக்கப்படுகின்றன, இது மக்களவைத் தேர்தல்கள் வருவதைக் குறிக்கிறதா?" என்று அவர் கேட்டார்.

# ஆவடி விமானப்படை பராமரிப்பு நிலையத்தில் ஏர்மார்ஷல் ஆய்வு

ஆவடி, நவ.10-

ஆவடியில் இயங்கி வரும் இந்திய விமானப்படையின் பராமரிப்பு நிலையத்தில் நேற்று தளவாட பொருட்களின் வினியோகம், பராமரிப்பு பணிகளின் செயல்பாடுகள் மற்றும் தயார்நிலை குறித்து இந்திய விமானப்படையின் பராமரிப்பு பிரிவு தளபதியும் மூத்த அதிகாரியுமான ஏர்மார்ஷல் விஜய்குமார் கார்க் நேரில் பார்வையிட்டு ஆய்வு நடத்தினார். அவருடன், அவரது மனைவியும், விமானப்படை குடும்ப நலச் சங்கத் தலைவருமான ரிதுகார்க், விமானப்படையின் குடும்ப நலச்சங்க உள்ளூர் பிரிவால் நடத்தப்படும் பல்வேறு நலவாழ்வு நடவடிக்கைகள் குறித்தும் விசாரித்தார்.

அவர்களின் குடும்ப மற்றும் தனிப்பட்ட சுகாதாரம், கல்வி, குழந்தைகளின் முழுமையான வளர்ச்சி ஆகியவற்றில் புதிய முன்னேற்றங்களை பற்றி அறிந்து கொள்ளவும் ஊக்குவித்தார்.

முன்னதாக, ஏர்மார்ஷல் விஜய்குமார் மற்றும் அவரது மனைவி ரிதுகார்க்கை ஆவடி விமானப்படை நிலையத் தலைவர் ஏர் கமோடர் பிரதீப் சர்மா, விமானப்படை குடும்ப நலச்சங்க (உள்ளூர்) தலைவர் குரூப் கேப்டன் (ஓய்வு) ரச்னா சர்மா வரவேற்றனர்.

# போலி மருத்துவர்கள்.. பதிவு செய்யாத மருத்துவமனைகள்.. பறந்தது அதிரடி உத்தரவு

சென்னை, நவ.10-

தமிழ்நாட்டில் பதிவு செய்யாத அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், மருத்துவ நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் எச்சரிக்கை விடுத்துள்ளது. போலி மருத்துவர்கள் தொடர்பாக புகார் அளிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் முறையான கல்வித் தகுதி இல்லாமல், போலி மருத்துவர்கள் பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கும் சம்பவங்கள் தொடர்ந்து வருகின்றன. குறிப்பாக, வேலூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் போலி மருத்துவர்கள் பிடிபடும் சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இதுபோன்ற சம்பவங்கள் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இதனை தடுக்கும் நோக்கில், சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் சந்தேகத்திற்கிடமாக இருந்தால் காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என பொதுமக்களுக்கு போலீசார் அறிவுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில், போலி மருத்துவர்கள் தொடர்பாக புகார் அளிக்கலாம் எனவும், பதிவு செய்யாத அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் விடுத்துள்ள அறிவிப்பு: தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனைகள், ஆய்வகங்கள், நோயறிதல் மையங்கள் (Clinics) ஆகியவை தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் சட்டம் 1997ன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். அரசு மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் tncea.dmrhs.tn.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யாத நிறுவனங்கள் மீது தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைபடுத்துதல்) சட்டம் 1997ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆயுதப்படை நடத்தும் நிறுவனங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. போலி மருத்துவர்கள் தொடர்பாக tncea.dmrhs@gmail.com என்ற இணையதளத்திலும், 104 என்ற இலவச தொடர்பு எண் மூலமும் புகார் அளிக்கலாம். ஒருமுறை பதிவு பெற்ற மருத்துவ நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளின் உரிமம் 5 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். 5 ஆண்டுகள் முடிந்த பின் மீண்டும் tncea.dmrhs.tn.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவு செய்து புதுப்பித்துக்கொள்ளலாம். பதிவு செய்யாத மருத்துவமனைகள், நிறுவனங்கள் 2026 ஜுன் மாதத்திற்குள் சம்மந்தப்பட்ட மாவட்ட அலுவலரிடம் பதிவு செய்ய வேண்டும். இதற்கான கால அவகாசத்தை நீட்டிக்கவோ, சலுகைகள் வழங்கப்படமாட்டாது என்று மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் அறிவித்துள்ளது.




■ தேனி மாவட்டம், தேனி உழவர் சந்தையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் (Special Intensive Revision) பணிகள் தொடர்பாக, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள காய்கறிகள் மற்றும் பழங்கள் சிற்ப கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

# திண்டுக்கல் 7 சட்டமன்றத் தொகுதிகளில் கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் தகவல்

திண்டுக்கல், நவ.10-

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சீனிவாசபுரம் மற்றும் ஆனந்தகிரி பகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்களுக்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்கான கணக் கெடுப்பு படிவத்தினை இன்று (0811.2025) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் வீடுதோறும் சென்று வழங்கினார். திண்டுக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்கான கணக்கெடுப்பு படிவம் வீடுதோறும் சென்று வாக்காளர்களுக்கு வழங்கப்படும் பணி 04.11.2025அன்று முதல் தொடங்கி நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிக ளுக்கான கணக்கெடுப்பு படிவம் வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வருகின்ற 04.12.2025அன்று வரை வழங்கப்படவுள்ளது.

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக சிறப்பு தீவிர திருத்தம் 2026 நடைபெற்று வருகின்றது.



அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளில் அமைந்துள்ள 2,124 வாக்குச்சாவடி மையங்களுக்கு நியமிக் கப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் தங்களது பாகத்தில் உள்ள வாக்காளர்கள் வீடுகளுக்கு நேரடியாக சென்று கணக்கெடுப்பு படிவங்களை (Enu-meration Form) கடந்த 04.11.2025 முதல் வழங்கி வருகின்றனர். திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளில் 04.11.2025 முதல் இன்று 08.11.2025 மாலை 6.00 மணி வரையில் 16,24,378 (83.97%) (பதினாறு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து முந்நூற்று எழுபத்தெட்டு) கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வாக்காள ர்களுக்கு தொடர்ந்து கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இப்பணியில் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதி களின் வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் மேற்பார்வையாளர்கள், தேர்தல் பிரிவு பணியாளர்கள் அனைவரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், மாவட்டத்தில் உள்ள அரசு துறையில் பணிபுரியக்கூடிய தன்னார்வலர்கள் (Vol-unteers) வாக்குச்சாவடி நிலை அலுவலருக்கு உதவிட இரண்டு நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கணக்கெடுப்பு படிவம் வழங்கும் பணி நடைபெற்று வந்த நிலையில், தற்போது விடுபட்ட நபர்களுக்கு மீண்டும் கணக்கெடுப்பு படிவம் வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், தன்னார்வலர்கள் மூலம் வழங்கப்பட்ட படிவங்களை பூர்த்தி செய்யும் பணிகள் தொடங்கப்படவுள்ளது.

மேலும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்காக தங்களது வீடு தேடி வரும் வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுக்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் தெரி வித்துள்ளார்.

இந்நிகழ்வில், கொடைக்கானல் வருவாய் கோட்டாட்சியர் திருநாவுக்கரசு, கொடை க்கானல் நகராட்சி ஆணையர் சங்கர், கொடை க்கானல் வட்டாட்சியர் பாபு அவர்கள் ஆகியோர் உட்பட பலர் உடனிருந்தனர்.

# காற்று மாசுவால் ஏற்படும் துயரம்: தம் அடிக்கும் பழக்கம் இல்லாத இளைஞர்களுக்கும் புற்றுநோய்

## 30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் பாதிப்பு

சென்னை, நவ.10-

உலகளவில் புற்றுநோய் மரணங்கள் வரும் 2050ம் ஆண்டுக்குள், தற்போதுள்ளதை விட 75 சதவீதம் வரை அதிகரிக்கும் என ‘லான்செட்’ மருத்துவ இதழ் வெளியிட்டுள்ள ஆய்வில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. இதன்மூலம், ஆண்டுக்கு 1.86 கோடி பேர் உயிரிழப்பார்கள் என்றும், புதிதாக 3.05 கோடி பேர் புற்றுநோயால் பாதிக்கப்படு வார்கள் என்றும் கணிக்கப் பட்டுள்ளது. உலக மக்கள் தொகையின் பெருக்கம், வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களே இந்த அபாயகரமான உயர்வுக்கு முக்கிய காரணங்களாகக் கூறப்பட்டுள்ளன.



குறிப்பாக, இந்தியா போன்ற குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் தான் பாதிப்புகளும், உயிரிழப்புகளும் அதிகமாக இருக்கும் என்றும் அந்த ஆய்வில் எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்படி, கடந்த 1990 முதல் 2023ம் ஆண்டு வரை யிலான காலகட்டத்தில் இந்தியாவில் புற்றுநோய் பாதிப்பு விகிதம் 26.4 சதவீதம் அதிகரித்துள்ளது. இங்கு ஏற்படும் புற்றுநோய்களில் 70 சதவீதம் வரை, வாழ்க்கை முறை மாற்றங்கள் மூலம் தடுக்கக் கூடியவையே என்று ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. புகையிலை, மதுப்பழக்கம், ஆரோக்கியமற்ற உணவு, உடல் பருமன், உடற்ப யிற்சியின்மை, காற்று மாசுபாடு போன்றவையே இந்தியாவில் புற்றுநோய் அதிகரிக்க முக்கிய காரணிகளாகும். மேலும், நோய் கண்டறிவதில் ஏற்படும் தாமதம் மற்றும் தரமான சிகிச்சை கிடைப்பதில் உள்ள சவால்களும் இறப்பு விகிதத்தை அதிகரிக்கின்றன.

எனவே, வாழ்க்கை முறையை மாற்றுவதன் மூலமும், ஆரம்பக்கட்டத்திலேயே நோயைக் கண்டறியும் வகையில் தொடர்ச் சியான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலமும் பெரும்பாலான புற்றுநோய் பாதிப்புகளையும், மரணங் களையும் தடுக்க முடியும் என மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.இது ஒருபுறம் இருக்க, நாட்டில் உள்ள பெருநகரங்களில் புற்றுநோயால் டெல்லி மக்களே அதிகம் பாதிக்கப்படுவதாகவும் மற்றொரு ஆய்வில் தெரிய வந்துள்ளது. பெருநகரங்களில் மிகவும் அதிகப்பட்சமாக டெல் லியில் ஒரு லட்சம் பேரில் 146 பேருக்கு புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக, நுரையீரல் புற்றுநோய் அதிகரி த்துள்ளது. டெல்லியில் நிலவும் அதிகப்படியான காற்று மாசுவே இதற்கு காரணம். கடந்த 2018ம் ஆண்டுகளில் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நுரையீரல் புற்றுநோயாளிகளில் 90 சதவீதம் பேர் புகைப்பி டிக்கும் பழக்கத்தை கொண்டவர்களாக இருந்தனர். தற்போது, புகைப்பிடிக்கும் பழக்கம் இல்லாதவர்களும் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்படுவது அதிகமாகி உள்ளது.

தற்போது அறுவை சிகிச்சை செய்ய ப்படும் நுரையீரல் புற்றுநோயா ளிகளில் 70 சதவீதம் பேர் புகைபிடிக்கும் பழக்கம் இல்லாதவர்கள். இவர்கள் பெரும்பாலும் 50 வயதுடையவர்களாக உள்ளனர். அதேபோல், 30 வயதுக்கு உட்பட்ட புகைப்பிடிக்கும் பழக்கம் இல்லாதவர்களும் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர் என்கிறது அந்த ஆய்வு அறிக்கை.



# தமிழகத்துக்கு மன்னராட்சி தேவையில்லை: நயினார் நாகேந்திரன்

தருமபுரி, நவ.10-

பாஜக சார்பில் தருமபுரியில் நடந்த கிராமக் கூட் டத்தில் பங்கேற்ற மாநிலத் தலைவர் நயினார் நாகேந் திரன், பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது, ராஜராஜசோழன் ஆட்சிக் காலத்தில் ராஜேந்திர சோழன் அமைச்சரானார் என்று அமைச் சர் துரைமுருகன் கூறியது குறித்து செய்தியாளர்கள் கேட்டனர்.

இதற்கு பதில் அளித்த நயினார் நாகேந்திரன், “அது மன்னராட்சி, தற்போது நடப்பது மக்களாட்சி. அதிமுக வில் எம்ஜிஆருக்குப் பிறகு ஜெயலலிதா. அவருக்குப் பிறகு சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்த பழனி சாமி என்ற மக்களாட்சி நிலைதான் உள்ளது. ஆனால், திமுகவில் கருணாநிதி, ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் என ஒரே குடும்பத்தினரே முதல்வர் ஆகிக் கொண்டிருந் தால் மக்களின் நிலை என்னாவது? மக்களின் பிரச்சினை களைத் தீர்க்க மன்னராட்சி தேவையில்லை, மக்களாட் சி போதும்” என்றார்.

# விஜய், அதிமுக, பாஜக கூட்டணி.. எடப்பாடி பழனிசாமியின் எண்ணம் அதுதான்.. ஜிகே வாசன் பேட்டி

சென்னை, நவ.10-

என்டிஏ கூட்டணியில் தவெகவை சேர்க்க வேண்டும் என்பதே எடப்பாடி பழனிசாமியின் எண்ணமாக இருப்பதாக தமாகா தலைவர் ஜிகே வாசன் தெரிவித்துள்ளார். பொது எதிரியான திமுகவை வீழ்த்த வேண்டும் என்ற நோக்கில் விஜய் தங்கள் கூட்டணிக்கு வர வேண்டும் என்றும், அப்படி நடந்தால் சட்டசபைத் தேர்தலில் திமுகவின் தோல்வி உறுதி என்றும் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கும் சூழலில், கூட்டணி தொடர் பான பேச்சுவார்த்தைகள் உச்சத்தில் இருக்கிறது. ஏற்கனவே திமுக கூட்டணியில் ஏராளமான கட்சிகள் இருந்து வரும் நிலையில், புதிதாக தனியரசு, கருணாஸ், தமீமுன் அன்சாரி உள்ளிட்ட பலரும் இணை வார்கள் என்று எதிர்பார் க்கப்படுகிறது.

அதேபோல் ஏப்ரல் மாதத்தில் அதிமுக பாஜக கூட்டணி அறிவிக்கப்பட்டது. இந்த கூட்டணி அறிவிப்புக்கு பின் பாஜகவுடன் கூட்டணியில் இருந்த அமமுக மற்றும் ஒபிஎஸ் உள்ளிட்டோர் வெளியேறி இருக்கின்றனர். பாமகவும் இரண்டாம உடைந்துள்ள நிலையில், அதிமுக தலைமையிலான கூட்டணியில் என்னென்ன கட்சிகள் இடம்பெறும் என்ற கேள்விகள் எழுந்தன. இதுதொடர்பாக தொடர் விவாதமும் நடந்து வருகிறது. அதிமுக பாஜக கூட்டணிக்குள் எப்படியாவது விஜய்யை கொண்டு வர வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். கரூர் விவகாரத்திற்கு பின் தவெகவுக்கு வந்த சிக்கல் அத்தனையிலும் அதிமுக ஆதரவு கொடுத்தது. ஆனால் தவெக சிறப்பு பொதுக்குழுவில் தவெக தலைமையில் கூட்டணி என்று தீர்மானம் போடப்பட்டது. இதன்பின் அதிமுகவினர் விஜய் யையும், தவெகவையும் அட்டாக் செய்ய தொடங்கியுள்ளனர். இந்த நிலையில் என்டிஏ கூட்டணி தொடர்பாக தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் ஜிகே வாசன் பேசியுள்ளார். அதில் ஜிகே வாசன் பேசுகையில், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தவெகவை சேர்க்க வேண்டும் என்பதே எடப்பாடி பழனிசாமியின் எண்ணமாக இருக்கிறது.

திமுக ஆட்சிக்கு எதிரான வாக்குகள் அதிக ரித்து வருகின்றன. எனவே எங்கள் கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இணைய வாய்ப்புக்ள்ளது. பொது எதிரியான திமுகவை வீழ்த்த வேண்டும் என்ற நோக்கில் விஜய் கூட்டணிக்கு வர வேண்டும். அப்படி நடந்தால் 2026 சட்டசபைத் தேர்தலில் திமுகவின் தோல்வி உறுதியான ஒன்று. திமுக வேண்டாம் என்று நினைக்கும் கட்சிகள் இணைந்து ஆட்சியை வீழ்த்தும் நிலை வரும் மாதங்களில் உருவாகும் என்று தெரிவித்துள்ளார்.

# தனி பெர்மிட் வேணுமாம்.. ஆம்னி பஸ் உரிமையாளர் சங்கம் வைத்த கோரிக்கையை.. பாருங்களேன்

சென்னை, நவ.10-

பொங்கல், தீபாவளிக்கு அநியாய கட்டண கொள்ளையில் ஈடுபட்டு வந்த தமிழக ஆம்னி பேருந்துகள், இரு தினங்களுக்கு முன்னர் கேரளாவில் பறிமுதல் செய்யப்பட்டு ரூ.70 லட்சம் வரை அபராதம் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலையில், ஆம்னி பேருந்துகளுக்கு என தனி பெர்மிட் வேண்டும் என்று ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சென்னையிலிருந்து மதுரைக்கு போக வேண்டும் எனில் அரசு கி/சி பேருந்தில் ரூ.570 டிக்கெட் கட்டணமாக வசூலிக் கப்படும். தீபாவளியாக இருந்தாலும் சரி, பொங்கலாக இருந்தாலும் சரி டிக்கெட் விலை இதுதான். இதுவே ஏசி வசதியில்லாத பேருந்தில் ரூ.450 டிக்கெட் கட்டணமாக வசூலிக்கப்படும். ஆனால், இந்த நாட்களில் ஆம்னி பேருந்துகள் எனில் ரூ.2,000 வரை கட்டணம் வசூலிக்கப்படும்.

ஆம்னி பேருந்துகளின் ஆட்டம் இவ்வளவு விலை கொடுத்து ஆம்னி பேருந்துகளில் போக முடியாமல் பெண்களும், குழந்தைகளும் நள்ளிரவு வரை மணிக்கணக்கில் காத்திருந்து அரசு பேருந்துகளில் பயணித்து வருகிறார்கள். ஆம்னி பேருந்துகளில் நடக்கும் கட்டண கொள்கை குறித்து தொடர்ந்து புகார்கள் எழுந்த ாலும், கட்டண கொள்கை தடுக்கப்படுவதில்லை. இப்படி இருக்கை யில்தான் சபரிமலை சீசன் தொடங்கிவிட்டது, கல்லா கட்டிவிடலாம் என்று, ஆம்னி பேருந்துகள் அடித்து பிடித்து டிக்கெட்டுகளை ஏற்றிக் கொண்டு கேரளாவுக்குள் நுழைந்தன. அங்குதான் அதிர்ச்சி காத்திருந்தது. அபராதம் போட்ட கேரளா தமிழகத்தை சேர்ந்த ஆம்னி பேருந்துகள் போக்குவரத்து விதிகளை மீறியிருப்பதாக கூறி, பேருந்துக்கு தலா ரூ.2 லட்சம் என 30 பேருந்துகளுக்கு ரூ.70 லட்சம் வரை அபராதம் போட்டிருக்கிறது கேரள போக்குவரத்து துறை. இதனால் அதிர்ச்சியடைந்த ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம், இனி நாங்கள் கேரளாவுக்கு பேருந்துகளை இயக்க மாட்டோம் என்று திட்டவட்டமாக கூறியிருக்கின்றன. இரண்டாவது நாளாக இன்றும் கேரளாவுக்குள் பேருந்துகள் இயக்கப்படாமல் இருக்கின்றன.

ஆம்னி பேருந்து உரிமையாளர்களின் கோரிக்கை இந்நிலையில், மத்திய அரசு ஆம்னி பேருந்துத் துறைக்கு தனியான பெர்மிட் வழங்க வேண்டும் என அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் அன்பழகன் அறிக்கை விடுத்திருக்கிறார். அப்படியெல்லாம் எந்த பர்மிட்டும் வழங்க வேண்டியதில்லை. ஏற்கெனவே கொடுத்த பெர்மிட்டில் அவர்கள் பஸ்களை இயக்கினால் போதும் என்று சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். நாடு முழுவதும் இயக்கப்படும் பஸ்களை மூன்று பிரிவாக பிரித்துவிடலாம். 1. அரசு பேருந்துகள் 2. தனியார் பேருந்துகள் 3. ஆம்னி பேருந்து அரசு பேருந்துகள் பற்றி எல்லோருக்கும் தெரியும். குறிப்பிட்ட வழித்தடங்களில் குறிப்பிட்ட எண் கொண்ட பேருந்துகள் என, தமிழ்நாடு முழுவதும் குக்கிராமங்கள், மலை கிராமங்களை இந்த பேருந்துகள் நகரங்களுடன் இணைக்கின்றன. லாபம், நஷ்டம் எல்லாம் கணக்கு கிடையாது. சேவைதான் பிரதான நோக்கம். என்ன பிரச்சனை தனியார் பேருந்துகளை பொருத்த வரையில் சேவை மனப்பான்மை எல்லாம் கிடையாது. டிக்கெட் இருந்தால் வண்டி ஓடும். டிக்கெட் இல்லையெனில் அந்த வழித்தடத்தில் பேருந்துகளை இயக்க தனியார் பேருந்துகள் முன்வராது. அரசு மற்றும் தனியார் பேருந்துகளுக்கு ஸ்டேஜ் பர்மிட் வழங்கப்படும். அதாவது சென்னையில் புறப்படும் இந்த பேருந்துகள் மதுரை வரை இயக்கப்படும் எனில், வழியில் அனுமதிக்கப்பட்ட நிறுத்தங்களில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கி கொள்ளலாம். இருக்கைக்கு இவ்வளவு டிக்கெட் என்று வசூலித்துக்கொள்ளலாம். அபராதம் ஏன் இது இரண்டிலும் மாறுபட்டதுதான் ஆம்னி பேருந்துகள். இவைகளுக்கு ஸ்டேஜ் பர்மிட் வழங்கப்படாது. மாறாக ஒப்பந்த பேருந்துக்கான பெர்மிட் கொடுக்கப்படும். அதாவது ஆம்னி பேருந்துகள் இருக்கைக்கு இவ்வளவு டிக்கெட் என்று வசூலிக்க கூடாது. மாறாக மொத்தமாக ஆட்களை ஏற்றி சபரிமலைக்கு கொண்டு சென்று திரும்ப அவர்களை அழைத்து வர வேண்டும். அது இல்லாமல் வழியில் குமுளியில் 4 பேர், வண்டி பெரியாரில் 8 பேர் என இறங்கி ஏறக்கூடாது. ஆனால் தமிழக ஆம்னி பேருந்துகள் இருக்கைகளுக்கு டிக்கெட் ஏற்றிக்கொண்டு கேரளாவுக்குள் நுழைந்தன. இதனால் அம்மாநில போக்குவ ரத்துத்துறை அபராதங்களை விதித்தி ருக்கிறது.

# 1580 மெகாவாட் மின் கொள்முதல் 11 தனியார் நிறுவனங்களுடன் மின்வாரியம் ஒப்பந்தம்

சென்னை, நவ.10-

அடுத்த ஐந்துஆண்டுக்கு 1580 மெகாவாட் மின் கொள்முதல் செய்ய 11 தனியார் நிறுவனங்களுடன் மின்வாரியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. தமிழ்நாட்டில் தற்போது வீடு, வணிகம், விவசாயம் உள்ளிட்ட அனைத்து பிரிவுகளையும் சேர்த்து மொத்தம் 3.37 கோடி மின் இணைப்புகள் உள்ளன. வீட்டு இணைப்புகள் மட்டும் 2.4 கோடியாகும். தினமும் மின்சார நுகர்வு சராசரியாக 16,000 மெகாவாட்டாக உள்ளது. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது தமிழ்நாட்டில்தான் மின் நுகர்வோர் அதிகளவில் உள்ளது.

இதன் காரணமாக நுகர்வோருக்கு பூர்த்தி செய்யும் அளவிற்கு மின் வாரியத்தின் சொந்த மின் நிலையங்களில் கிடைக்கும் மின்சாரம் குறைவாகவே இருப்பதனால் ஒன்றிய மின் நிலையம் மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்கு காரணமாக மின்சாரம் என்பது கொள்முதல் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. அதன்படி, அடுத்த ஐந்துஆண்டுக்கு தினசரி 1,500 மெகாவாட் மின்சாரம் என, ஐந்து ஆண்டுகளுக்கு கொள்முதல் செய்ய, மின் வாரியம் சமீபத்தில் ‘டெண்டர்’ கோரி இருந்தது. இதில் தற்போது 11 நிறுவனங்களிடமிருந்து 1580 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய மின்வாரியம் ஒப்பந்தம் செய்துள்ளது.

இதுகுறித்து மின்வாரிய தலைவர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது: தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்ற பல்வேறு நடவடிக்கைகளை மின்வாரியம் மூலம் எடுத்து வருகின்றோம். குறிப்பாக, சூரியஒளி, காற்றாலை மின் உற்பத்தி, மத்திய தொகுப்பில் இருந்து மின்சாரம் வாங்குதல் என நுகர்வோரின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. அடுத்த ஐந்து ஆண்டிற்கான மின்சார கொள்முதல் செய்யும் வண்ணம் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இதன் மூலம், கோடைக்காலம் போன்ற தேவை அதிகம் உள்ள காலங்களில் நிலையான மின்சாரத்தை வழங்க திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர் பேசினார்.



# துரோகங்களால் அதிமுகவை வீழ்த்த முடியாது: பழனிசாமி திட்டவட்டம்

சேலம், நவ.10-

துரோகங்களால் அதிமுகவை வீழ்த்த முடியாது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி கூறினார்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் நேற்று நடைபெற்ற அதிமுக 54ம் ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டத்தில் பழனிசாமி பேசியதாவது: ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுக தொடர்ந்து சோதனைகளை சந்தித்து வருகிறது. ஆனாலும், மக்கள் செல்வாக்கு குறையவில்லை. ரூ.30,000 கோடி ஊழல் செய்த திமுக தேர்தலை சந்திக்க தயாராக இருக்கிறது. ஸ்டாலின் எவ்வளவு சூழ்ச்சிகள் செய்தாலும் பலிக்காது. துரோகங்களால் அதிமுகவை வீழ்த்த முடியாது.

எத்தனை துரோகிகள் கட்சியை வீழ்த்த முயன்றாலும், அத்தனை பேரையும் வீழ்த்தி அதிமுக தலைநிமிர்ந்து நிற்கிறது. பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத ஆட்சிதான் தற்போது தமிழகத்தில் நடக்கிறது. போக்சோ சட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.104 கோடி நிவாரணம் வழங்கப்பட்டதாக பெருமையாக கூறுகின்றனர். பாலியல் வன்கொடுமையை போக்சோ சட்டத்தை கடுமையாக அமல்படுத்துவதால்தான் தடுக்க முடியும். நிவாரணம் கொடுப்பதால் அல்ல.

திமுக அரசு தனக்கு வேண்டப்பட்டவர்களை டிஜிபியாக கொண்டுவர வேண்டுமெனக் கருதி, அதற்கான பட்டியலை அனுப்பவில்லை. உள்ளாட்சி பணி நியமனத்தில் ரூ.888 கோடி ஊழல் நடந்துள்ளது. 5.50 லட்சம் அரசு காலி பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. திமுக ஆட்சியில் 4 ஆண்டுகளில் 75,000 பேர் பணி ஓய்வுபெற்ற நிலையில், 50 ஆயிரம் பேரைத்தான் அரசுப் பணியிடங்களில் நியமித்துள்ளனர். படித்தவர்களையும், படிக்காதவர்களையும் ஏமாற்றும் ஒரே கட்சி திமுக. தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி பழைய ஓய்வூதிய திட்டத்தையும் அமல்படுத்தவில்லை. அனைத்து தரப்பினருக்கும் அதிமுகதான் பாதுகாப்பான ஆட்சியாக இருக்கும்.

ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்கள் பிரச்சினைக்கு குரல் கொடுப்பது அதிமுகதான். 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக வெற்றி பெற முடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளதால், மாணவர்களுக்கு லேப்டாப் கொடுக்கப்படும் என்று அறிவித்துள்ளனர். மகளிர் உரிமைத் தொகையை மையப்படுத்தி, வாக்குகளைப் பெற திமுக அரசியல் தந்திரம் செய்கிறது.

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்தில், அதிமுகவுக்கு வாக்களிக்க கூடியவர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க முயற்சிப்பார்கள்.

இவ்வாறு பழனிசாமி பேசினார்.

# விடுமுறை தினத்தையொட்டி ஒகேனக்கல், ஏற்காட்டில் குவிந்த சுற்றுலா பயணிகள்: குடும்பத்துடன் பரிசல், படகு சவாரி சென்று உற்சாகம்

ஏற்காடு, நவ.10-

விடுமுறை தினமான இன்று ஒகேனக்கல் மற்றும் ஏற்காட்டிற்கு சுற்றுலாப்பயணிகள் வருகை அதிகமாக இருந்தது. சேலம் மாவட்டத்தில் உள்ள ஏழைகளின் ஊட்டியான ஏற்காட்டுக்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். குறிப்பாக, பண்டிகை மற்றும் விடுமுறை நாட்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகமாக இருக்கும். கடந்த சில நாட்களாக ஏற்காட்டில் மழை பொழிவால், ‘ஜில்’ கிளைமேட் நிலவி வருகிறது. வழக்கமாக மாலையில் நிலவும் குளுகுளு சீதோஷ்ண நிலையில் நண்பகலில் இருந்தே துவங்கி விடுகிறது. இரவில் கடும் குளிர் நிலவுகிறது.

ஞாயிறு விடுமுறை தினமான இன்று காலையில் இருந்தே சுற்றுலாப்பயணிகள் வரத்தொடங்கினர். பனி மூட்டத்தை ரசித்தவாறு கார், பைக்குகளில் சுற்றுலா பயணிகள் வந்தனர். இதனால் ஏற்காடு அண்ணா பூங்கா, தாவரவியல் பூங்கா, பகோடா பாயிண்ட், லேடீஸ் சீட், சேர்வராயன் கோயில், கிளியூர் நீர்வீழ்ச்சி உள்ளிட்ட பகுதிகளில் கூட்டம் அதிகமாக இருந்தது. குறிப்பாக, ஏற்காடு படகு இல்லத்தில், நீண்ட வரிசையில் காத்திருந்து படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பால், தள்ளுவண்டி கடைகள், ஓட்டல்களில் விற்பனை அதிகரித்தது.

இதேபோல் ஒகேனக்கல்லில் தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் அருகில் உள்ள மாவட்டங்கள், கர்நாடகத்தில் இருந்து இன்று ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். அங்குள்ள முதலை பண்ணை, பூங்காவை ரசித்த பொதுமக்கள், எண்ணெய் மசாஜ் செய்து அருவிகளில் குளித்தும், குடும்பத்துடன் பரிசல் பயணம் செய்து காவிரியின் அழகை ரசித்தும் மகிழ்ந்தனர். அங்குள்ள மீன் வறுவல் கடை, ஓட்டல்களில் விற்பனை களை கட்டியது. மேட்டூர் அணை பூங்கா, இடைப்பாடி அடுத்த பூலாம்பட்டி, நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை, சேலம் குரும்பப்பட்டி உயிரியல் பூங்காவிற்கும் இன்று சுற்றுலாப்பயணிகள் வருகை அதிகமாக இருந்தது.

# மேட்டுப்பாளையத்தில் வனத்துறை ஜீப்பை தாக்க முயன்ற ‘பாகுபலி’ யானையால் பரபரப்பு: வனக்கல்லூரி கேட்டை உடைத்து புகுந்தது

மேட்டுப்பாளையம், நவ.10-

மேட்டுப்பாளையம் வனக்கல்லூரியில் கேட்டை உடைத்து உள்ளே புகுந்த பாகுபலி யானை வனத்துறை ஜீப்பை தாக்க முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது. கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான தேக்கம்பட்டி, தாசம்பாளையம், நெல்லித்துறை, ஓடந்துறை, ஊமப்பாளையம், பாலப்பட்டி, வச்சினம்பாளையம், சிறுமுகை லிங்காபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக பாகுபலி என பொதுமக்களால் அழைக்கப்படும் ஒற்றை காட்டு யானையின் நடமாட்டம் இருந்து வருகிறது.

இந்த யானை வனப்பகுதியை ஒட்டியுள்ள விளைநிலங்களில் புகுந்து பயிர்களை தொடர்ந்து சேதம் செய்து வருகிறது.



இந்த யானை இதுவரை பொதுமக்கள் எவரையும் தாக்கவோ, தாக்க முயற்சிக்கவும் இல்லை. இந்நிலையில் கடந்த சில தினங்களாக சிறுமுகை வனப்பகுதியில் இருந்து வந்த பாகுபலி யானை நேற்றிரவு வனக்கல்லூரி வழியாக மேட்டுப்பாளையம் வனப்பகுதிக்குள் செல்ல முயன்றது. அப்போது, வனக்கல்லூரியின் புதிய நுழைவு வாயில் கேட்டை உடைத்து உள்ளே சென்றது.

இத்தகவலறிந்த அறிந்த மேட்டுப்பாளையம் மற்றும் சிறுமுகை வனத்துறையினர் யானையை விரட்டும் ஜீப் மூலம் பாகுபலி யானையை அச்சுறுத்தி, எரிச்சலூட்டும் வகையில் விரட்ட முற்பட்டுள்ளனர். அப்போது ஜீப்பை பாகுபலி யானை தாக்க முயன்றது.தொடர்ந்து ஜீப் மூலம் சைரனை ஒலிக்க விட்டு சப்தமிட்ட படியே யானையை வனத்துறை ஊழியர்கள் விரட்டினர். பயந்த யானை தப்பிக்க முயன்ற போது யானையை விரட்டி சென்ற ஜீப் எதிர்பாராத விதமாக யானையின் காலில் மோதியது.

தொடர்ந்து பிளிறியபடி அங்கிருந்து சென்ற பாகுபலி யானையை வனத்துறை வாகனங்கள் தொடர்ந்து சென்று கோத்தகிரி சாலையை கடந்து மேட்டுப்பாளையம் வனப்பகுதிக்குள் விரட்டி அடித்தன.

இதனால் நேற்றிரவு கோத்தகிரி சாலையில் பரபரப்பு ஏற்பட்டது.

# கரூரில் மாரத்தான், வாக்கத்தான் போட்டிகள் செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார்

கரூர், நவ.10-

கரூரில் சிஐஐ, யங் இன்டியன்ஸின் சார்பில் நடைபெற்ற மாரத்தான், வாக்கத்தான் போட்டிகளில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

கரூர் சிஐஐ மற்றும் யங் இன்டியன்ஸ் இணைந்து கரூர் விஷன் 2030 நான்காம் பதிப்பு மாரத்தான் மற்றும் வாக்கத்தான் கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் நடைபெற்றது. பங்கேற்பாளர்களை சிஐஐ தலைவர் பிரபு வரவேற்றார். இந்த நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, தேசிய கொடியை ஏற்றிவைத்து ஆற்றிய சிறப்புரையில், “கரூரின் பொருளாதாரத்தை 2030ம் ஆண்டில் ரூ.50,000 கோடியாக உயர்த்த வேண்டும். நம் முன்னோர்கள் கட்டி அமைத்து கொடுத்த கரூரை நாம் மேலும் மேம்படுத்தி அடுத்த தலைமுறைக்கு வழங்க வேண்டும்“ என தெரிவித்தார்.




தொடர்ந்து, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, ஆட்சியர் தங்கவேல், எஸ்.பி. ஜோஷ் தங்கையா ஆகியோர் புறாக்களை பறக்கவிட்டு, கொடியசைத்து மாரத்தான், வாக்கத்தானை தொடங்கி வைத்து வாக்கத்தானில் பங்கேற்றனர். இந்நிகழ்வில், கரூர் கோட்டாட்சியர் முகமது பைசல், கரூர் மாநகராட்சி ஆணையர் சுதா, கரூர் வட்டாட்சியர் மோகன்ராஜ், சிஐஐ துணை தலைவர் பெருமாள், யங் இன்டியன்ஸ் யோகேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஏடிஎஸ்பி பிரபாகரன் தலைமையில் கரூர் டிஎஸ்பி செல்வராஜ், கரூர் நகர இன்ஸ்பெக்டர் மணிவண்ணன் உள்ளிட்டோர் போலீஸார் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

பெரியவர்களுக்கான மாரத்தான் போட்டி 10 கி.மீட்டர், 5 கி.மீட்டர் பிரிவிலும், சிறுவர்களுக்கான (8 வயது முதல் 14 வயதிற்குள்) மாரத்தான் போட்டி 5 கி.மீட்டர் பிரிவில் நடைபெற்றது. இதேபோல், பெரியவர்களுக்கான வாக்கத்தான் போட்டி 3 கி.மீட்டர் பிரிவில் நடைபெற்றது. இப்போட்டியில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உள்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

மாரத்தான் ே க்கு கோப்பை மற்றும் சான்றிதழ் ஆகியவற்றுடன் முதல் பரிசு ரூ.10,000, 2ம் பரிசு ரூ.5,000, 3ம் பரிசு ரூ.3,000 மற்றும் 4, 5ம் பரிசாக கோப்பை, சான்றிதழ் வழங்கப்பட்டன. போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் இலவசமாக டிஷர்ட் மற்றும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்பட்டன.

போட்டிகள் காரணமாக கரூர் திரு.வி.க. சாலையில் வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனால் கரூர் லைட் ஹவுஸ் முனையில் இருந்து அமராவதி ஆற்று பாலம் வரை வாகன நெரிசல் ஏற்பட்டது.



# இந்திய பயனர்களுக்காக கூகுள் மேப்ஸில் புதிய அப்டேட்கள் அறிமுகம்

சென்னை, நவ.10-


அண்மையில் இந்திய கூகுள் மேப்ஸ் பயனர்களுக்காக முக்கிய அப்டேட்களை கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது. இது பயனர்களின் பயண திட்டத்தை சிறப்பாக அமைக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏதேனும் ஒரு புதிய இடத்துக்கோ அல்லது ஊருக்கோ செல்வதென்றால் பெரும்பாலனவர்கள் இப்போது கூகுள் மேப்ஸ் துணையை நாடுவதுண்டு. லொகேஷனை பகிர்ந்தால் போதும் அட்ரஸ் இல்லா தெருக்களை கூட கூகுள் மேப்ஸ் அறியும் என சொல்லலாம். அந்த அளவுக்கு உலகம் முழுவதும் இந்த அப்ளிகேஷன் மிகவும் பிரபலம். இந்தியாவில் தினந்தோறும் கூகுள் மேப்ஸில் 5 கோடிக்கும் மேற்பட்ட இடங்கள் குறித்து பல்வேறு மொழிகளில் சர்ச் செய்யப்படுவதாக தகவல். இதன் ஒட்டுமொத்த தூரம் சுமார் 2.5+ பில்லியன் கிலோ மீட்டர் என தகவல்.

இந்நிலையில், இந்திய பயனர்களுக்காக சில அப்டேட்களை கூகுள் மேப்ஸில் கூகுள் நிறுவனம் கடந்த 6ம் தேதி அறிமுகம் செய்தது. அந்த வகையில் கூகுளின் ஏஐ அசிஸ்டன்ட் Gemini-யை, கூகுள் சேர்த்துள்ளது. இதன் மூலம் கூகுள் மேப்ஸ் செயலியில் இருந்தபடி பயனர்கள் நிமீனீவீஸீவீ உதவியை பெறலாம்.

அதேபோல பயனர்கள் பயணிக்கும் சாலையின் ஸ்பீடு லிமிட், விபத்து ஏற்படும் இடம் குறித்த தகவலையும் கூகுள் மேப்ஸில் இப்போது அறிந்து கொள்ள முடியும். இப்போதைக்கு இந்த அம்சம் டெல்லி, மும்பை, பெங்களூரு நகரங்களில் மட்டும் அறிமுகமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் முறையாக சந்தையில் இந்த அம்சத்தை கூகுள் அறிமுகம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இருசக்கர வானங்களை பயன்படுத்தும் பயனர்களுக்கு ‘நவதார்ஸ்’ எனும் அம்சத்தை அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் இருசக்கர வாகன பயனர்கள் தாங்கள் பயன்படுத்தும் ஸ்கூட்டர், பைக் போன்றவற்றை அவதார்களாக கட்டமைத்துக் கொள்ள முடியும். இந்த அம்சங்கள் முதலில் ஆண்ட்ராய்டு பயனர்களுக்கு அறிமுகமாகும். அதன் பின்னர் ஆப்பிள் ஐஓஎஸ் பயனர்களுக்கு அறிமுகமாகும் என கூகுள் தெரிவித்துள்ளது.



# பூண்டி ஏரியில் இருந்து 2,000 கனஅடி நீர் திறப்பு

சென்னை, நவ.10-

பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து 2,000 கனஅடி நீர் திறக்கப் படுகிறது. மதுராந்தகம் ஏரியில் இருந்து 300 கனஅடியும், புழல் ஏரியில் இருந்து 500 கனஅடியும், செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து 300 கனஅடியும் உபரிநீர் வெளியேற்றப்படுகிறது.

வடகிழக்கு பருவமழை காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர் நிலைகளும் வேகமாக நிரம்பி வருகின்றன. நேற்று காலை 6 மணி நிலவரப்படி பூண்டி சத் தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கத் தின் 35 அடி மொத்த உயரத் தில் 33.75 அடி உயரத்துக்கு நீர் உள்ளது. மொத்த கொள்ளளவான 3,231 மில்லியன் கனஅடி 2,745 மில்லியன் கனஅடியாக உள்ளது. ஏரிக்கு விநாடிக்கு 2,600 கனஅடி மழைநீர் வந்து கொண்டுள்ளது. இந்நிலையில் பேபி கால்வாய் வழியாக விநாடிக்கு 47 கனஅடி நீர் அனுப்பி வைக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து நீர்த்தேக் கத்தில் இருந்து விநாடிக்கு 2,000 கனஅடி வீதம் உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இந்நிலையில் செம்பரம்பாக்கம் ஏரிக்கு அனுப்பப்பட்டு வந்த விநாடிக்கு 400 கனஅடி நீர் முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. செம்பரம்பாக்கம் ஏரியின் 24 அடி மொத்த உயரத்தில் 22.55 அடி உயரத்துக்கு நீர் உள்ளது. மொத்த கொள்ளளவான 3,645 மில்லியன் கன அடியில் தற் போது நீர்இருப்பு 3,261 மில் லியன் கனஅடியாக உள்ளது.

ஏரிக்கு நீர்வரத்து விநாடிக்கு 650 கன அடியாக உள்ளது. சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 165 கனஅடி தண்ணீர் அனுப்பி வைக் கப்படுகிறது. மேலும் ஏரியிலிருந்து விநாடிக்கு 300 கனஅடி வீதம் உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

புழல் ஏரியின் 21.20 அடி மொத்த உயரத்தில் 19.12 அடி உயரத்துக்கு நீர் உள்ளது. மொத்த கொள்ளளவான 3,300 மில்லியன் கனஅடியில் தற்போது நீர்இருப்பு 2,837 மில் லியன் கனஅடியாக உள்ளது. ஏரிக்கு நீர்வரத்து விநாடிக்கு 235 கனஅடியாக உள்ளது. இந் நிலையில் சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 184 கனஅடி நீர் அனுப்பி வைக்கப்படுகிறது.

காஞ்சி மாவட்டத்தில் கம்பக் கால்வாயில் இருந்து வரும் நீரால் பல்வேறு ஏரிகள் நிரம்பியுள்ள நிலையில், பரந்தூர், சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. மதுராந்தகம் ஏரி யின் முழு கொள்ளளவான 25 அடியில் தற்போது 23 அடிக்கு நீர் நிரம்பியுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏரிக்கு வரும் 300 கனஅடி நீர் அப்படியே கிளியாற்றில் வெளி யேற்றப்படுகிறது.

# வேகமாக நிரம்பி வரும் ஏரிகள்; பாசன கால்வாய் வசதி இல்லாததால் நீரில் மூழ்கிய விளை நிலங்கள்: ஏரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கால்வாய் அமைக்க விவசாயிகள் கோரிக்கை

திருத்தணி, நவ.10-

பருவமழைக்கு திருத்தணி பகுதியில் நீர் நிலைகள் வேகமாக நிரம்பி வரும் நிலையில், நீர் பிடிப்பு பகுதிகளில் பாசன கால்வாய்கள் வசதி இல்லாததால், மழைநீர் வீணாகி, விளைநிலங்கள் நீரில் மூழ்குவதால், பயிர் சாகுபடி செய்ய முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். ஏரிகள் நிறைந்த மாவட்டம் என்று சிறப்பு பெற்ற திருவள்ளூர் மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக விவசாயம் விளங்குகிறது. ஆறு, ஏரி நீரை பயன்படுத்தி பெரும்பாலான விவசாயிகள் பயிர் சாகுபடி செய்து வருகின்றனர்.

நீர்நிலைகளில் மழைநீர் தேக்கி வைப்பதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து பயிர் சாகுபடி மற்றும் குடிநீர் ஆதாரமாகவும் விளங்குகிறது.



இந்நிலையில், வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால், திருத்தணி கோட்டத்தில் நீர்பாசனத்துறைக்கு சொந்தமான 79 ஏரிகள் வேகமாக நிரம்பி வருகின்றன. திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை ஆகிய பகுதிகளில் இதுவரை 36 ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன. இதில், ஆர்.கே.பேட்டையில் 20, திருத்தணியில் 12, பள்ளிப்பட்டில் 8 ஏரிகள் முழு கொள்ளளவை எட்டி உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. ஏரிகள் நிரம்பினாலும், உபரி நீர் பாசன வசதிக்கான பாசன கால்வாய்கள் அடைக்கப்பட்டும், ஆக்கிரமிக்கப்பட்டதாலும் பெரும்பாலான பகுதிகளில் ஏரி உபரி நீர் வீணாகி விளை நிலங்களை மூழ்கடித்து வருவதால், விவசாயிகள் பயிர் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், வடகிழக்கு பருவமழை பெய்து வரும் நிலையில், திருத்தணி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கனமழை பெய்தது. ஏரி பாசனத்தை கொண்டு ஏராளமான விவசாயிகள் பயிர் சாகுபடியில் ஈடுபடுகின்றனர். முப்போகம் விளைவிக்கும் பகுதிகளில் தண்ணீர் பாசனத்திற்கு தேவையான நீர் இருப்பில் இருந்தும் அதனை உரிய முறையில் பயன்படுத்த பாசன கால் வாய்கள் இல்லை. குறிப்பாக பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பாசன கால்வாய்கள் இருந்த இடம் தெரியாமல் ஆக்கிரமிக்கப்பட்டு விவசாய நிலங்களாக மாற்றப்பட்டுள்ளது. இதனால், ஏரி நீர் கடைக்கோடி விளைநிலங்களுக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளது. இதனால், பெரும்பாலான ஏரிகளில் உள்ள தண்ணீர் நீர்பாசன பகுதிகளில் உள்ள விளை நிலங்களை மூழ்கடித்து பயிர்களை நாசம் செய்கிறது. எனவே, ஏரிநீர் வீணாவதை தடுக்கும் வகையில் பாசன கால்வாய் அமைக்க வேண்டும், என்று கோரிக்கைவிடுக்கின்றனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000